## வெளிநாடுகளுக்கு ஆவின் நெய் ஏற்றுமதியால் விற்பனை அதிகரிப்பு:

# தமிழ்நாட்டில்தான் மிகக் குறைந்த விலையில் பால் - பால் பொருட்களை விற்கிறோம்!

## சட்டப்பேரவையில் – பால்வளத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பதிலுரை!

**சென்னை, ஏப்.6- சட்டப்பேரவையில் பால்வளத்துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில்தான் மிகக்குறைந்த விலையில் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்கிறோம் என்று அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

சட்டப் பேரவையில் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் பதிலுரை வருமாறு:-

தொண்டு செய்து பழுத்தப்பழம், தூய தாடி மார்பில் விழும், மண்டைச் சுரப்பை உலகு தொழும், மனக்குகையில் சிறுத்தை எழும்தந்தை பெரியார். கொட்டுகின்ற மழையில் Robinson Parkல் இயக்கத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தை துவங்குகின்ற நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள். மிட்டா மிராசுகள், பட்டாதாரர்கள், பெருந்தனக்காரர்கள் ஆலை அதிபர்கள், தொழில் அதிபர்கள் இவர்களை எதிர்த்து தான் இந்த இயக்கத்தை தொடங்குகிறேன் என்று அன்றைக்கு கொட்டுகின்ற மழையில் தமிழ்நாட்டிற்கு செந்தமிழ்நாடு என்று பெயரிட்ட நம்முடைய பேரறிஞர் பெருந்தகை ஆசான் அண்ணா அவர்கள் தொடங்கினார்கள். அவருடைய வழித்தோன்றலாக, அவருடைய அன்புத் தம்பியாக தலைவர் கலைஞர் அவர்கள் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டம், கன்னியாகுமரியில் வான் தொடும் திருவள்ளுவர் சிலை, பூம்புகார் குகை கோபுரம், இராஜ ராஜ சோழனுக்கு சிலை எடுத்த மிகப் பெரிய சிற்ப கலைஞர், ஜல்லிக்கட்டு நாயகர் பெண்களுக்கு சொத்தில் சம பங்கு என்று சட்டங்கள்மூலம் சமூக சீர்திருத்தம் செய்த புரட்சியாளர், நின்ற தேர்தல்களில் எல்லாம் அனைத்திலும் வெற்றி பெற்ற வெற்றியாளர் (மேசையைத் தட்டும் ஒலி). உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்று சொல்லி நின் தலைவரை நாட்டுக்கு தந்த தொலைநோக்கு சிந்தனையாளர், செம்மொழி ஆசான். செம்மொழியான நமது தமிழ்மொழிக்கு உயர்தனிச் செம்மொழி அந்தஸ்தை வழங்கி செம்மொழி என்ற மிகப்பெரிய ஒரு அடைமொழியை வாங்கித்தந்த மாபெரும் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். அவர் திசைநோக்கி தொழுகின்றேன்.

தாயகம் போக்கும் கிழக்கே, எளியவர் வீட்டின் விளக்கே, ஆலயமாய் உயர்ந்தும் அளந்தே நடப்பவரே, புயல் விளையாடும் போதும் பூங்காற்றாய் சிரிப்பவரே, சாதி, மத ஒழிப்பு, பெண்ணுரிமை, மாநில சுயாட்சிப் பாதையில் உழைப்பவரே, சகிப்புத்தன்மையின் உச்சகட்டமே, எங்கள் உச்சவரே, ஒன்றிய அரசுக்கு முன் தமிழகம் மானம் காப்பவரே, குழந்தை கொண்டாடி பாசத்தில் சொல்லும் ஸ்டாலின் அப்பா என்று பெரும் போற்றுதலுக்குரிய முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி).

**கலைஞரின் மனஉறுதி!**

கொள்கை பயணத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் மனஉறுதி, தமிழ்நாட்டைச் சுற்றிவரும் தலைவர் தந்த இளம்பரிதி, இளையவர்கள், ஏற்றம் பெற்றவர்கள், உயர்வு பெற்றவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் மேலும் உயர்வதற்கு வழிகாட்டுகின்ற தலைமை, ஒன்றிய அரசின் தலைவர்கள் கூர்ந்து கவனிக்கின்ற வலிமைமிக்க இளம் தலைவர், விளையாட்டுத் துறையின் ஒன்றியத்தை, அவர் சார்ந்திருக்கும் துறைகள் அனைத்திலும் பாராட்டி வாழ்த்தும் மக்கள் பணியிலே சிறந்த தலைமை, அவமானப்படுத்துகிற தனியொரு மனிதனுக்காக போர்க்களத்தை அமைத்து, அவன் தன்மானம் பெறுவதற்கு போராடுகின்ற கோபாலபுரத்து தலைமை, தமிழ்நாடு நம்பியிருக்கும் இளம் தலைமை துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

## கூட்டுறவுச் சங்கங்களில் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு ரூ.2,000 கோடி கடன்!

அடுத்ததாக நம்முடைய அவை முன்னவர், கழகத்தினுடைய பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களை வணங்குகின்றேன். நம்முடைய கே.என்.நேரு அமைச்சர் உட்பட, நம்முடைய இ.பெரியசாமி உட்பட, முனைவர் க. பொன்முடி உட்பட, எ.வ. வேலு உட்பட, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அனைத்து அமைச்சர் பெருமக்களையும் வணங்குகின்றேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வணங்குகின்றேன்.

உங்கள் கேள்விக்கு என்னுடைய பதிலை தருவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். நீங்கள் அனைவரும் உங்களுடைய கருத்துகளை தெரிவித்தீர்கள். அதிலே ஒன்றிரண்டு கருத்துகளை மாத்திரம் சொல்லி விடைபெறலாம் என்று நினைக்கின்றேன். 1958 ஆம் ஆண்டிலே நம்முடைய பால்வளத் துறை துவங்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு பால்வளத் துறை நம்முடைய ஆட்சியில் துவங்கப்பட்டது. அப்போது இருந்தவர்கள் எல்லாம் பால்வளத் துறையிலே ஆவின்தான் மிகச் சிறந்த ஒரு பால்வளத் துறை என்பதை இன்றைக்கு நிருபித்திருக்கிறோம். ஏறத்தாழ 13 இலட்சம் லிட்டர் கடந்த ஆட்சியைக் காட்டிலும், இந்த ஆட்சியிலே 13 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியை கூட்டியிருக்கிறோம்.

நம்முடைய தலைமை, இந்த ஆண்டு மாத்திரம் 4.15 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியை கூட்டியிருக்கிறோம். ஆகவே, தொடர்ந்து lean period என்று சொல்வார்கள். ஏப்ரல் மாதத்தையும், மே மாதத்தையும் lean period என்று சொல்வார்கள். அப்போது பால் உற்பத்தி குறையும். பால் உற்பத்தி குறைகின்ற நேரத்திலும்கூட இப்படி அதிகமான பால் உற்பத்தியை செய்து எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் மிகச் செம்மையாக ஒரு சிறப்பாக நடத்துகின்ற ஒரு ஆட்சிதான் நம்முடைய தலைமை, முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரில் நடைபெறுகின்ற இந்த ஆட்சி. அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரிலே நம்முடைய ஆவின் ஒரு சிறந்த நிர்வாகத்தைப் பெற்றிருக்கிறது.

**உற்பத்தியாளர்க்கு கூடுதலாக 3 ரூபாய்!**

மூன்று ரூபாய் கொடுக்கிறார் ஒரு லிட்டருக்கு. ஏற்கெனவே மூன்று ரூபாய் குறைத்தார் தேர்தல் அறிவிப்பில் சொன்னபடி. அதில் ஒரு கோடி பேர் பயன் பெற்றார்கள். ஒரு கோடி பேர் மூன்று ரூபாய் குறைத்ததன் விளைவாக பால்வளத் துறையிலே ஒரு கோடி பேர் பயன் பெற்றார்கள்.

இப்பொழுது மூன்று ரூபாய் கூட்டியிருக்கிறார். மூன்று ரூபாய் ஊக்கத்தொகை கொடுக்கிறார். 342 கோடி ரூபாய் ஊக்கத்தொகை. ஒரு லிட்டருக்கு மூன்று ரூபாய் என்று ஊக்கத்தொகை கொடுக்கிறார். ஆகவே, உற்பத்தியாளர்களும் நம்முடைய ஏழை மக்கள். நுகர்வோரும் ஏழை மக்கள். ஆகவே, பால் விலையை கூட்ட வேண்டுமென்று பல்வேறு நண்பர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால், யாரும் அழுத்திப் பேசவில்லை. ஏனென்றால் உற்பத்தியாளரும் அப்படிதான் இருக்கிறார்கள். Consumerம், நுகர்வோரும் அப்படிதான் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

ஆகவே, தமிழ்நாட்டிலே பால்வள உற்பத்தி இன்றைக்கு 18 பெரிய projects வந்திருக்கிறது நம்முடைய ஆட்சிக்காலத்தில். நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக 18 projects இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதிலே ஒன்றுதான் ஐந்து இலட்சம் லிட்டராக இருக்கின்ற பால் உற்பத்தியை ஏழு இலட்சம் லிட்டராக உயர்த்த வேண்டுமென்பதற்காக சேலத்திலே எடுத்திருக்கின்ற முயற்சி. இன்றைக்கு சேலம், ஈரோடு, கோவை, தஞ்சாவூர், பெரம்பலூர், தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் 18 projects, ரூ.1,800 கோடிக்கு மேல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்கு பின்னால் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

**செம்மையாக செயல்படும் பால்வளத்துறை**

ஆக, பால் வளத் துறை மிகச் செம்மையாக இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. பெண்களும், குழந்தைகளும், பெரியவர்களும் தினமும் காலையில் coffee, Tea சாப்பிடாதவர்கள் யாருமே கிடையாது. அந்தளவிற்கு பால் என்பது அனைவரின் வாழ்விலும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஆகவே, நம்முடைய முதல்வர் அவர்கள் மிகவும் சிறந்த முறையில் கவனம் செலுத்தி இந்தத் துறை மிகச் சிறப்பாக வர வேண்டுமென்று என்னைப் பணித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒத்துழைப்போடு, இந்தத் துறை மிகச் சிறந்த முறையில் செயல்படும். தற்போது, லிட்டருக்கு மூன்று ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. அதுதவிர, விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடா accountமூலம் கொடுத்துவிடுகிறோம். அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்போடு பால் உற்பத்தியாளர்களுடைய அந்தந்த bank accountல் வழங்குவதால் இடைத்தரகர்கள் இல்லை, அதிகாரிகளுக்கு பணியில் எந்தக் குழப்பம் கிடையாது. ஆகவே, இதில் ஊழல் நடைபெறுவதற்கு வழியே இல்லை.

பால் உற்பத்தியை மூன்று முறைகளில் பெருக்க வேண்டுமென்று நாம் முடிவு செய்திருக்கிறோம். தற்போது 36 இலட்சம் லிட்டராக இருக்கின்ற பால் உற்பத்தியை 54 இலட்சம் லிட்டராக கொண்டுவரவேண்டுமென்று நாம் இன்றைக்கு முயற்சி எடுத்திருக்கிறோம். அதனைச் சிறப்பாக அடுத்தடுத்து வரக்கூடிய காலங்களில் கொண்டு வருவோம். சத்தான சமச்சீர் தீவனம் வழங்கி கறவை மாடுகளின் உற்பத்தி திறனை அதிகரித்தல் என்பது ஒன்று. இரண்டாவது, புதிய தொழில்நுட்பம்மூலம் பால் உற்பத்தியை அதிகமாக பெருக்க வேண்டும். அடுத்து, கூட்டுறவு பால் வள சங்கங்களெல்லாம் மிகவும் dormant ஆக இருக்கிறது.

தமிழ்நாட்டில் 300 சங்கங்களுக்கு மேலாக dormant ஆக இருக்கிறது. அந்த 300 சங்கங்களையும் நாம் திரும்ப கொண்டு வந்து, ஒவ்வொரு சங்கத்திற்கும் பால் உற்பத்தியாளர்களைக் கொண்டு வந்தால்தான் பால் உற்பத்திச் செய்ய முடியும். அப்போதுதான் நம்முடைய targetஐ achieve செய்ய முடியும். வெறும் வாய் வார்த்தையாக சொல்லிவிட்டு போவதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்னவென்றால், 56 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்தால்தான் நம்முடைய மக்கள் அனைவருக்கும் பால் வழங்க முடியும். Private பாலைப் பொறுத்தவரையில், ஒரு லிட்டர் பாலின் விலை 56/ ரூபாய், நம்முடைய ஆவின் பாலின் விலை ஒரு லிட்டர்



40/ ரூபாய் ஆகும். Private சங்கங்களை எடுத்துக் கொண்டால், நம்முடைய மாநிலத்திலும் சரி, பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையிலும் சரி, தனியாரைவிட மிகவும் குறைவான விலைக்கு பால் வழங்குகின்ற ஒரே இயக்கம் நம்முடைய ஆவின் தான். அந்த நிலைதான் இன்றைக்கு வருகிறது.

பால் கொள்முதல் விலையில் Toned Milk (Blue Colour) ரூ.40/க்கு கொடுக்கிறோம்; தனியார் பால் ரூ.5860/க்கு கொடுக்கிறார்கள். Standardised Milk (Green) ரூ.44/க்கு கொடுக்கிறோம்; தனியார் பால் விலை ரூ.65 முதல் 68/ வரை. Full Cream Milk (Orange) ரூ.60/க்கு கொடுக்கிறோம்; தனியார் பால் விலை ரூ.74 முதல் 80/வரை. நம்முடைய மாநிலத்தில் Tirumala (Tirumala Milk Products Pvt Ltd.), Jersey, வல்லபா, Heritage (Heritage Foods), Arokya போன்றவையெல்லாம் நம்முடைய மாநிலங்களில் உள்ளன. பிற மாநிலங்களான, கர்நாடக மாநிலத்தில் நந்தினி, கேரளா மாநிலத்தில் வில்மா, குஜராத் மாநிலத்தில் அமுல் போன்றவை இருக்கின்றன. இவற்றை ஆவின் பால் விலையோடு ஒப்பிட்டு பார்க்கையில், நம்முடைய Toned Milk (Blue) ரூ.40/; நந்தினியில் ரூ.48/க்கு கொடுக்கப்படுகிறது.

மில்மா கேரளாவில் ரூ.52/க்கு விற்கிறார்கள்; அமுல் ரூ.54/க்கு கொடுக்கிறார்கள். Standardised Milk நாம் ரூ.44/க்கு கொடுக்கிறோம்; நந்தினி ரூ.56/க்கு கொடுக்கிறார்கள், மில்மா கேரளாவில் ரூ.54/க்கு கொடுக்கிறார்கள்; குஜராத் மாநிலத்தில் அமுல் ரூ.60/க்கு கொடுக்கிறார்கள். Full Cream Milk (Orange) நாம் ரூ.60/க்கு கொடுக்கிறோம்; நந்தினி ரூ.62/க்கு கொடுக்கிறார்கள்; மில்மா ரூ.68/க்கு கொடுக்கிறார்கள்; குஜராத் மாநிலத்தில் அமுல் ரூ.66/க்கு கொடுக்கிறார்கள்.

**குறைந்த விலையில் பால் வழங்குகிறோம்**

ஆகவே அனைத்து வகையிலும், மிகக் குறைவான விலையிலே பால் வழங்குகின்ற ஒரே துறை நம்முடைய ஆவின் தான் என்பது மிகவும் சிறப்பான அம்சமாகும். அப்படிதான் தமிழ்நாட்டில் வழங்கி வருகிறோம். நாம் நிறைய பால் உற்பத்திப் பொருட்கள் விற்கிறோம். ரூபாய் 560 கோடிக்குமேல் பால் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்கிறோம். அவை, பால் கோவா, பன்னீர், தயிர், மோர் ஆகியவற்றை battery வண்டிமூலம் பொது இடங்களில் விற்க சொல்லியிருக்கிறோம். இதுபோன்று புது method மூலமாக salesஐ அதிகரிக்க சொல்லியிருக்கிறோம். அதே போல sweet, bread, ரொட்டி, biscuit ஆகிய அனைத்தையும் விற்கிறோம்.

சேலம், ஈரோடு, மதுரை ஆகிய இடங்களில் Ice creamக்கு என்று மூன்று தொழிற்சாலைகள் இருக்கின்றன. திருச்சியில் 6,000 லிட்டர் கொள்ளவுக் கொண்ட ஒரு தொழிற்சாலையில் மீதமான பாலை powder ஆக மாற்றி உப பொருட்களாக தயார் செய்து விடுகிறோம். ஆகையால் பாலில் waste என்பதே இருக்காது. எந்த விதமான wasteம் இருக்காது. அதன்மூலம் வருடத்திற்கு 560 கோடி ரூபாய் அளவிற்கு விற்கிறோம். நாம் இப்போது அந்தளவுக்கு battery carகள் மூலமாக பொது இடங்களில் விற்கிறோம்.

தமிழ்நாட்டில், ஈரோடு, சேலம், மதுரை, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 5 பால் பவுடர் பண்ணைகளில் நாளொன்றுக்கு 90 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறனுடன் இயங்கி வருகின்றன. மதுரை, ஈரோடு, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 18 இடங்களில், நாளொன்றுக்கு 40 டன் உற்பத்தி திறன் கொண்ட நெய் உற்பத்தி ஆலைகள் செயல்பட்டுவருகின்றன. நெய்யை ஹாங்காங், சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு நெய் ஏற்றுமதி செய்கிறோம். 50 ரூபாய் கூட இருந்தாலும் நம்முடைய நெய் தான் வாங்குகிறார்கள்.

ஏனென்றால், இந்தியாவில் உற்பத்தி செய்யக்கூடிய மற்ற நெய்யைக்காட்டிலும் ஆவினுடைய நெய் தான் first priorityல் இன்றைக்கு விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. அந்தளவிற்கு நம்முடைய ஆவின் நெய்யினுடைய உற்பத்தி பெருகியிருக்கிறது. இவையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய காலத்தில் தான் சாதனைப் படைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு முன்பு பலர் ஆவின் துறையை கவனித்து வந்தார்கள். பாலில் தண்ணீரைக் கலந்தது, அதுவெல்லாம் இப்போது முடிந்துவிட்டது. இப்போது அப்படியெல்லாம் செய்ய முடியாது. அனைத்திற்கும் instrument வந்துவிட்டது. பால் ஒப்புகைச் சீட்டிலிருந்து அந்தந்த பாலின் தரம், quality control உள்ளிட்ட எல்லாவற்றுக்கும் machineries வந்துவிட்டன. (குறுக்கீடு) அவர்கள் தரம் என்று சொன்னால், நாம் உடனே பதில் சொல்ல தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு) இப்படி பால் உற்பத்தியை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது சம்பந்தமாக முதல்வர் அவர்களின் அனுமதியோடு நாங்கள் மலேசியா சென்றிருந்தோம். அங்கு Stall போட்டோம். ஏகப்பட்ட கூட்டம். நிறைய பேர் வந்தார்கள். தமிழ்நாட்டில் பால் உற்பத்தி இவ்வளவு அதிகமாக இருக்கிறதே! எங்களுக்கும் கொடுங்கள்.

ஆவின் பொருட்கள்தான் தரமாக இருக்கின்றன. அதனால் agentகள் நிறைய அளவில் நியமிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்தோம். தற்போது Americaவிற்கு நெய்யெல்லாம் சென்று கொண்டிருக்கிறது. மலேசிய மாநாட்டிலும் நம்முடைய பொருட்களை வைத்து, எல்லாரும் வந்து பார்த்தார்கள். மிகப் பெருமையாக பேசிக்கொண்டார்கள். அங்கு ஆவின் பொருட்களை வாங்குவது குறித்த பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**தயிர் உற்பத்தி அதிகரிப்பு!**

கோயம்புத்தூர், திண்டுக்கல், அம்பத்தூர் உட்பட 6 இடங்களில் நாளொன்றுக்கு 5,400 கிலோ உற்பத்தி திறன் கொண்ட பன்னீர் உற்பத்தி ஆலைகள் இயங்கி வருகின்றன. பன்னீர், தயிர், மோர் ஆகியவையெல்லாம் உற்பத்தி செய்கிறோம். நாளொன்றுக்கு 54,000 டன் தயிர் மட்டும் உற்பத்தி செய்து தயிர் வழங்குகிறோம். சேலம், கோயம்புத்தூர், அம்பத்தூர் உட்பட 17 இடங்களில் நாளொன்றுக்கு 53,700 கிலோ தயிர் உற்பத்தி திறன் கொண்ட ஆலைகள் செயல்பட்டுவருகின்றன. இது தவிர, மில்க் ஷேக் & குல்பி, கோவா மற்றும் இனிப்பு வகைகள் அம்பத்தூர், மாதாவரம், சோழிங்கநல்லூர் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

## செங்கல்பட்டு மாவட்டத்தில் 1 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடைய பால் பண்ணை!

சோழிங்கநல்லூரில், சென்ற ஆட்சியில் 187 கோடிக்கு ஒரு உற்பத்தி நிலையம் தொடங்கப்பட்டு மூடப்பட்டது. தற்போது அதை மறுபடியும் திறந்தோம். அங்கு தயாரிக்கப்படும் பால் 90 நாட்களுக்கு கெடமால் இருக்கும். அந்தப் பாலை வடகிழக்கு மாநிலங்களில் அதிகம் வாங்குவார்கள். மணிப்பூர் போன்ற மாநிலங்களில் எல்லாம் பால் கிடையாது. Powder வாங்கி பாலாக்கி கொள்வார்கள். நம்முடைய 90 நாட்கள் கெடாத பாலைத்தான் வாங்குவார்கள். அதனால் அதையும் உற்பத்தி செய்து, ஒரு நாளைக்கு 55 ஆயிரம் லிட்டர் உற்பத்தி செய்கிறோம். அதை இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறோம்.

**மாடுகளுக்கு தீவனம்!**

கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் மாடுகளுக்கு தீவனம் போடுவதைப் பொறுத்த வரையில், தஞ்சாவூர் மாவட்டம், சூலக்கரையில் முதலமைச்சர் அவர்களால் ஒரு Project திறக்க இருக்கிறோம். இன்னும் 15 projectகளை 2025க்குள் திறக்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அனைத்து வேலைகளும் வேகமாக நடந்துக்கொண்டிருக்கிறது. ஏனென்றால், இது ஏற்கெனவே நம்முடைய ஆட்சியால் கொண்டு வந்த project. தற்போது அவை முடிந்துவிட்டன. இப்போது 3 projectகள் வந்துள்ளன. மீதமிருக்கும் projectகள் வரவிருக்கின்றன. ஆகவே, இந்த 18 projectகளை முடிக்கும்போது நம்முடைய ஆவினை பிடிக்கவே முடியாது. மிகச்சிறப்பாக இருக்கும். இந்தியாவிலேயே பால் உற்பத்தியில் நாம்தான் முதலிடத்தில் இருப்போம்.

சிங்கப்பூர், ஹாங்காங், கத்தார், மலேசியா போன்ற நாடுகளில் ஆவின் நெய் மற்றும் நறுமன பால் பொருட்களை ஏற்றுமதி செய்வதால், விற்பனையும் அதிகரித்து வருகின்றன. அதுபோக, அமெரிக்காவிற்கு நெய் ஏற்றுமதி குறித்து சொன்னேன். அது மட்டுமல்லாமல், புதிய முயற்சிகள் மற்றும் அறிவிப்புகள் குறித்தும் சொல்கிறேன்.

அவற்றில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அச்சரப்பாக்கத்தில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடைய பால் பண்ணை 46.81கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

**தூத்துக்குடியில் பால் பண்ணை!**

தூத்துக்குடி மாவட்டத்தில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய பால் பண்ணையுடன், மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை ரூ.43.39 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.

சேலம் பால் பதன ஆலையின், பால் பதப்படுத்தும் திறன் நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து 7 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு முழுவதுமாக தானியங்கி முறையில் அமைப்படுகிறது. மேலும், நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன் பால் பவுடர் மற்றும் டெய்ரி ஒயிட்னர் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை ரூ.108.08 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு, தற்போது அதற்கான வேலை நடைபெற்று வருகிறது. அது மிக விரைவிலே பயன்பாட்டுக்கு வரும். உறுப்பினர் அருள் அவர்கள் கை தட்டுகிறார்கள். அதை அவர் பார்த்திருப்பார் என்று நான் நினைக்கிறேன்.

அதிகபட்சம் அரை மணி நேரம்தான் பேச வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், எனக்குப் பிறகு அமைச்சர்கள் மூன்று பேர் பேச வேண்டியிருக்கிறது. நானும் மதுரைக்கு செல்ல வேண்டும். பிற்பகல் 12.50 மணி flightக்குச் செல்ல வேண்டும். ஆக, 12.30 மணிக்கு சென்று விடுவேன்.

தஞ்சாவூர் ஒன்றியத்தில் செய்திருக்கிறோம். அதே மோதிரி கடலூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணை அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

திட்டக்குடியில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியில், ஒரு நாளைக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் மாட்டுத் தீவன தொழிற்சாலை ஏற்படுத்தப்படும். அதேமாதிரி தஞ்சாவூரிலும் அமைக்கப்படும்.

திருச்சி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 6,000 லிட்டர் ஐஸ்கிரீம் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ.21.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்ட ஒன்றியத்தில் 1 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட பாலாடைக் கட்டி ஆலை ரூ.13.14 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**ஆவின் நிறுவனம் மிகச்சிறப்பாக செயல்படுகிறது!**

கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் வழங்கும் பாலுக்கு உடனடி ஒப்புகைச் சீட்டு வழங்குதல். ஒரு நாளைக்கு எத்தனை லிட்டர் பால் ஊற்றுகிறோமோ அதற்கு எவ்வளவு ரூபாய் என்று அப்பொழுதே கையில் கொடுங்கள் என்கிறார்கள். இல்லையென்றால், ஏமாற்றி விடுவார்கள் என்று சொல்லி அப்பொழுதே வாங்கிக் கொண்டு சென்று விடுவார்கள். அதற்கு machine எல்லாம் கொண்டு வந்துவிட்டோம். ஆகவே, எந்த விதமான தவறுகளும் நடக்காத வகையில், இன்றைக்கு ஆவின் நிறுவனம் மிகச் சிறப்பாக செயல்படுகிற அளவிலே கொண்டு வருகிறோம். 520 கோடி ரூபாய்க்கு உப பொருட்களை விற்பனை செய்கிறோம். நிறைய பேருக்கு, 2,000 பேருக்கு appointment போட வேண்டியிருக்கிறது. முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, எதிர்காலத்தில்Tamil Nadu Public Service Commission (TNPSC) மூலமாக தேர்வு செய்யப்பட்ட 60 பேர்களில், 10 பேருக்கு நாளையதினம் முதலமைச்சர் அவர்கள் பணி ஆணை கொடுக்கிறார்கள். மீதமுள்ளவர்களுக்கு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் TNPSCலிருந்து நிறையபேர் வேலைக்கு சேருகிறார்கள்.

பெரம்பலூர் மாவட்டம், பாடாலூரில் நாளொன்றுக்கு 60 மெட்ரிக் டன் தானியங்கி முறையில் பால் பவுடர் தயாரிக்கும் ஆலை ரூ.152.89 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. திருச்சி ஒன்றியம், நீலகிரி ஒன்றியம் மட்டுமல்லாமல் எல்லா ஒன்றியங்களிலும், எல்லா இடங்களிலும் நம்முடைய தொழிற்சாலைகள் வருகின்றன. 18 தொழிற்சாலைகளும் சிறப்பாக வருகிறபோது, பால் பண்ணை ஒரு பக்கம், பால் ஒரு பக்கம். பால் வளத் துறை மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை ஆகிய இரண்டு துறைகளும் தமிழ்நாட்டில் சிறப்பாக இருக்கின்றன.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் நான் படித்துப் பார்த்தேன். அனைத்து உறுப்பினர்களும் 'கொள்கை' பற்றி விவாதிக்க என்று கொடுத்திருக்கிறீர்கள். உறுப்பினர் ஜி.கே. மணி நிறைய வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார். அவர்களுடைய பகுதியில் ஏனென்றால், இதை எல்லோரும் கேட்கக்கூடியது. கேள்வி கேட்பதில் எந்தவித தவறும் கிடையாது. நாம் அன்றாடம் உபயோகப்படுத்தக்கூடிய பொருட்கள். ஆகவே, இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல முயற்சிக்கு நன்றி. உறுப்பினர்கள் அனைவரும் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை மனதிலே கொண்டு, நீங்கள் ஏதாவது கேட்க வேண்டுமென்றால் என்னுடைய பதிலுரை முடிந்த பிறகு கேட்கலாம். நான் சொல்லியிருப்பதெல்லாம் சிறப்பாக இருக்கிறது. அதில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் கிடையாது. ஆகவே, ஊழலும் கிடையாது. பால் பண்ணைத் துறை மிகத் தெளிவாக உள்ளது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

**அறிவிப்புகள்**

1. ரூபாய் 934 இலட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலின் தரத்தினை மதிப்பீடு செய்து உடனுக்குடன் ஒப்புகைச்சீட்டு வழங்கி கண்காணிக்க ஏதுவாக 1,437 கிளவுட் பால் பகுப்பாய்வு கருவிகள் நிறுவப்படும்.

2. ரூபாய் 645 இலட்சம் மதிப்பீட்டில் பாலில் கலப்படத்தை கண்டறியும் 129 நவீன அகச்சிவப்பு பகுப்பாய்வு கருவிகள் வழங்கப்படும்.

3. ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் பால் மற்றும் பால் உபபொருட்களின் விற்பனையை அதிகரிக்க 500 ஆவின் பாலகங்கள் புதியதாக தொடங்கப்படும்.

4. ரூபாய் 2000 கோடி மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்புக் கடன் கூட்டுறவுச் சங்கங்களில் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

5. ரூபாய் 240 இலட்சம் மதிப்பீட்டில் 14 மாவட்ட ஒன்றியங்களில் 30 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் புதுப்பிக்கப்படும்.

6. ரூபாய் 150 இலட்சம் மதிப்பீட்டில் தரமான பால் கொள்முதல் செய்யத் தேவையான பால் பரிசோதனை உபகரணங்கள் 165 பால் தொகுப்பு குளிர்விப்பு மையங்களுக்கு வழங்கப்படும்.

7. ரூபாய் 223 இலட்சம் மதிப்பீட்டில் மாதவரத்தில் உள்ள மாநில மைய ஆய்வகம் கூடுதல் உபகரணங்களுடன் மேம்படுத்தப்படும்.

8. ரூபாய் 263 இலட்சம் மதிப்பீட்டில் 525 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கணினிமயமாக்கப்படும்.

9. ரூபாய் 72 இலட்சம் மதிப்பீட்டில் கறவை மாடுகளுக்கான பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்ய பால் உற்பத்தியாளர்களுக்கு தீவன விதைகள் வழங்கப்படும்.

10. ரூபாய் 238 இலட்சம் மதிப்பீட்டில் விழுப்புரம், வேலூர், மாதவரம் ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி நிலையங்களில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

11. ரூபாய் 194 இலட்சம் செலவில் உம்பளாச்சேரி இன பசு மாடுகளின் மரபணு மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்தும் நோக்கில் தேசிய பால் பதிவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

12. ரூபாய் 58 இலட்சம் மதிப்பீட்டில் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் கணினிமயமாக்கப்படும்.

13. ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் கறவை மாடுகள் பராமரிப்பு குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 12,000 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும்.

14. ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட அளவில் சிறந்த மூன்று கறவை மாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்படும்.

15. ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த கருத்தரங்குகள் நடத்தப்படும்.

16. ரூபாய் 210 இலட்சம் மதிப்பீட்டில் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க 600 குளிர்சாதன பெட்டிகள் வழங்கப்படும்.

17. ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் செயற்கை முறை கருவூட்டல் பணியை சிறப்பாக செயல்படுத்தும் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

18. ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் கறவை மாடுகளில் மடிநோய் கண்டறியும் பொருட்டு 100 சிறப்பு பரிசோதனை முகாம்கள் நடத்தப்படும்.

19. ரூபாய் 173 இலட்சம் மதிப்பீட்டில் கறவை மாடுகளில் கன்று ஈனும் இடைவெளியை குறைப்பதற்காக 2,000 மலடு நீக்க சிகிச்சை மற்றும் சினை பரிசோதனை முகாம்கள் நடத்தப்படும்.

20. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு நுண்கடன் வழங்கும் நோக்கில் வெண் நிதி திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

21. ஆவின் விற்பனை முகவர்களின் நலன் கருதி அவர்களின் பங்களிப்புடன் ஆவின் விற்பனை முகவர்கள் நல நிதி உருவாக்கப்படும்.

22. தேசிய பால்வள ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் உணவு தொல்நுட்ப கல்வி நிறுவனங்களுடன் இணைந்து புதிய வகை மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்யப்படும்.

23. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வகை சேவை மையங்களாக உருவாக்கப்படும்.

.இந்தத் துறையில் தலைமைச் செயலாளர் அவர்கள் முருகானந்தம், I.A.S. அவர்களுக்கும், நம்முடைய நிதித் துறை செயலாளர் உதயச்சந்திரன் I.A.S. அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர்கள் உமாநாத் I.A.S. அவர்களுக்கும், சண்முகம் I.A.S. அவர்களுக்கும், லெட்சுமிபதி I.A.S. அவர்களுக்கும், தினேஷ், I.A.S. அவர்களுக்கும் மற்றும் நம்முடைய பால்வளத் துறை செயலாளர் அவர்களுக்கும், பால்வளத் துறை M.D. அவர்களுக்கும், J.M.D. திருமதி பூங்கொடி I.A.S. அவர்களுக்கும், அனைத்து அரசு ஊழியர்களுக்கும், பால்வளத் துறையிலே பணியாற்றுகின்ற அனைத்துப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, துறையினுடைய மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் ராஜ கண்ணப்பன் பதிலுரையில் கூறினார்.